இராசிபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திரு.R.S.சுப்ரமணியன்

ந.க.எண். 01 / 2023–2024 நாள்.12.02.2024

பொருள் : மனைப்பிரிவு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – நாமக்கல் மாவட்டம் மோகனூர் வட்டாரம், இராசிபாளையம் ஊராட்சி – கிராம – சர்வே எண்.82/1K1Eல் அமைந்துள்ள 0.35 ஏக்கர் (அ)1420.00 சதுர.மீட்டர் பரப்பு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவு – அனுமதி வழங்கி உத்திரவிடல் – தொடர்பாக.

பார்வை : 1) அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3)த்துறை நாள்.04.05.2017.

2) அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.

3) அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3)த்துறை, நாள்.23.09.2020.

4) அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3)த்துறை, நாள்.09.12.2020.

5) அரசு கடிதம் எண்.19113/நவ4(3).2017–1 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.30.08.2017.

6) நகர் ஊராமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.

7) நகர் ஊராமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.320/2022/TCP3, நாள்.07.01.2022.

8) கட்டணம் செலுத்தும் கடிதம் நாள்.17.10.2023.

9) மனுதாரர் திரு.விஸ்வநாதன் நாள்.10.08.2023.

10) நகர் ஊரமைப்பு ஆணையாளர் எண்.4367/2019/ TCP2, நாள்.14.10.2019.

11) Online Application No.CSYEY1Y5 மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு , உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ஒப்புதல் எண் (Approval No.SWP/DTCP/Namakkal /Layout No.336/2023, நாள்.20.10.2023.

உத்தரவு

மோகனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இராசிபாளையம் ஊராட்சி சர்வே எண்.82/1K1Eல் அமைந்துள்ள 0.35 ஏக்கர் (அ)1420.00 சதுர.மீட்டர் பரப்பு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் கோரி நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநருக்கு விண்ணப்பதாரர் மனு செய்ததின் பேரில் சர்வே எண்.82/1K1Eல் அமைந்துள்ள 0.35 ஏக்கர் (அ)1420.00 சதுர.மீட்டர் பரப்பு கொண்ட மனைப்பிரிவு நிலத்தில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் நாமக்கல் மாவட்டம் அவர்கள் பார்வை (11)ன் படி விண்ணப்பதாரர் திரு.விஸ்வநாதன் அவர்களுக்கு பார்வை (11)ல் கண்டுள்ளவாறு மேற்படி மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை (11) ல் காணும் தொழில்நுட்ப அனுமதி கடிதம் மற்றும் அரசாணைகளின்படி உரிய கட்டணத்தை மனுதாரரிடம் தொடர்புடைய ஊராட்சி வசூல் செய்த பின்னரே மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்க வேண்டுமெனவும், பார்வை 11ல் கண்டுள்ள அரசாணையின்படி (Guide line Value) மனுதாரரிடமிருந்து உரிய அரசு கணக்கு தலைப்பில் அரசு வழிகாட்டி மதிப்பீட்டில் 3 சதவீத கட்டணத்தை (Online மூலம் தொகை செலுத்தப்பட்டுள்ளது ரூ.78,411/–) வசூல் செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 10 % பரப்பிற்கு அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகை பார்வை 8ல் காட்டிய கடிதத்தில் தெரிவித்தவாறு ரூ.2,62,700/– (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து ஏழுநூறு மட்டும்) Online மூலம் செலுத்தப்பட்டுள்ளது 19.10.2023) கணக்கில் செலுத்தி செலுத்துச் சீட்டின் அசல் மற்றும் நகலினை இவ்வலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

எனவே மனுதாரரால் உரிய கட்டணத் தொகை செலுத்திப்பட்டுவிட்டதால் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு சர்வே எண்.82/1K1Eல் 0.35 ஏக்கர் (அ)1420.00 சதுர.மீட்டர் மனைப்பிரிவிற்கு அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விவரங்களை மாற்றி அமைத்தல் கூடாது.
2. வரன்முறை செய்து வழங்கப்படும் மனனப்பிரிவுகளை வீடுகள் மட்டுமே கட்டுவதற்கு பயன்படுத்த வேண்டும். அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலைகள் எதுவும் ஏற்படுத்திட அனுமதியில்லை.
3. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.
4. ஒவ்வொரு மனையும் பத்திர பதிவு செய்யும்போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்தே பத்திரம் பதிவு செய்திடல் வேண்டும்.
5. அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவார்.
6. பத்திர பதிவுகள் மற்று நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.
7. கட்டிட வரம்பு சாலைக்கு 5 அடி விடப்பட வேண்டும்.
8. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவினை வழங்கப்பட்ட உத்தரவால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால் இம்மனைப்பரிவு அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்

Rasipalayam Panchayat · Namakkal District · Mohanur Panchayat Union

12.02.2024

தலைவர்
இராசிபாளையம் ஊராட்சி,
மோகனூர் வட்டாரம்

பெறுதல்

திரு. விஸ்வாதன்
கதவு எண்.4/242, இந்திரா நகர்,
காடச்சநல்லூர்,
திருச்செங்கோடு,
நாமக்கல் – 637 211.

நகல்

1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு நாமக்கல்
2. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மோகனூர் வட்டாரம் – தகவலுக்காக .
4. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மோகனூர் – தக்க நடவடிக்கைகள்.
5. வட்டாட்சியர், வட்டாசியர் அலுவலகம், மோகனூர் வட்டம் தக்க நடவடிக்கைகள்.